**தொடக்கல்வி இயக்கத்தின்கீழ் இயங்கும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் கற்றல் கற்பித்தல் பணி நாட்களின் எண்ணிக்கை மாற்றியமைத்தல்– அரசாணை**

சுருக்கம்

தொடக்கக் கல்வி–தொடக்கல்வி இயக்கத்தின்கீழ் இயங்கும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் கற்றல் கற்பித்தல் பணி நாட்களின் எண்ணிக்கை மாற்றியமைத்தல்– ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக் கல்வித் (தொ.க.3(1)துறை**

**அரசாணை (நிலை) எண். 127** **நாள்:07.06.2017**

திருவள்ளுவர் ஆண்டு–2048, வைகாசி–24,

**படிக்கப்பட்டது:**

1. பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.94088/பிடி1/ அ1/2015, நாள் 20.01.2016.
2. குழந்தைகளுக்கான கட்டாய கல்வி உரிமைச்சட்டம் 2009, பிரிவு 19 மற்றும் 25 அட்டவணை.
3. ஆசிரியர் சங்கங்கள் மற்றும் பொது மக்களின் கோரிக்கைகள்.
4. தொடக்கக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.10762/ஜே2/2017, நாள் 06.06.2017

**ஆணை:–**

மேலே முதலாவதாகப்பட்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறையின்படி பள்ளிக் கல்வி இயக்கத்தின் கீழ் இயங்கும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளியின் மொத்த வேலை நாட்களின் எண்ணிக்கை 210 நாட்களாகவும், தொடக்கக் கல்வி இயக்கத்தின் கீழ் இயங்கும் தொடக்க/ நடுநிலைப் பள்ளிகளுக்கு மொத்த வேலை நாட்களின் எண்ணிக்கை 220 எனவும் நிர்ணயம் செய்து பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு கல்வி விதிகளில் விதி 76(1)–ல் “In the case of Primary and Middle Schools the working days will be 220 day in the year with 200 instructional days” என குறிப்பிட்டதன் அடிப்படையில் தொடக்க மற்றும் நடுநிலை பள்ளிகளில் பணி நாட்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட சட்டப் பிரிவு 19,25–ன் கீழ் அமைந்த தர நிர்ணய பிரிவில், பள்ளி வேலை நாட்களை பொறுத்தவரை 1–5 வகுப்புகள் கொண்ட தொடக்கப் பள்ளிகளுக்கான குறைந்த பட்ச கற்றல் கற்பித்தல் நாட்கள் 200 என்றும், 6–8 வகுப்புகள் வரையிலான உயர் தொடக்க வகுப்புகளுக்கு 220 நாட்கள் என்றும், குறைந்த பட்ச நாள் வரையறை செய்யப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவது மற்றும் நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் தற்போது நடைமுறையில் உள்ள தொடக்கப்பள்ளி மாணவர்களின் கற்றல் கற்பித்தல் பணி நாட்கள் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி கற்றல் கற்பித்தல் நாட்களை விட மிகையாக உள்ளது என்றும், மேலும் தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கும் தொடக்கப் பள்ளிகளில் 1–5 வகுப்புகளும், நடுநிலைப் பள்ளிகளில் 1–8 வகுப்புகளும் இயங்குகின்றன என்றும், உயர்நிலைப் பள்ளிகளில் 6–10 எனவும், மேல்நிலைப் பள்ளிகளில் 6–12 என்ற வகையிலும் வகுப்புகள் உள்ளன. இதில், 6,7,8 வகுப்புகள் தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கீழ் வரும் நடுநிலைப் பள்ளிகளிலும், பள்ளிக்கல்வி இயக்கத்தின் கீழ் வரும் உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளிலும் இடம் பெறுகின்றன.

4. இந்நிலையில் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் சிறு வயது குழந்தைகளின் நலன் கருதி, குழந்தைகளுக்கான கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட வரம்புகளுக்குட்பட்டு, கற்றல் கற்பித்தல் பணி நாட்களை சற்று குறைத்து, குறைந்த பட்சம் உயர்நிலைப் பள்ளிகளில் உள்ளதைப் போன்று 210 நாட்களுக்கு அமைக்கலாம் என்றும், அதே வேளையில் தற்போது ஆசிரியர்கள் பணி நாட்களில் பல்வேறு பயிற்சிகளுக்கு செல்வதாலும், குறுவமையக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் போது ஈடுசெய் விடுப்பு வழுங்கப்படுவதாலும், பள்ளியில் கற்றல் கற்பித்தல் பணிகள் பெரிதும் பாதிப்பதைக் கருத்திற்கொண்டும், தொடக்க / நடுநிலைப் பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் பணி நாட்கள் 10 நாட்கள் குறைத்து குழந்தைகளுக்கு 210 நாட்களுக்கு கற்றல் கற்பித்ல் பணி நாட்களாக அமைக்கலாம் என்றும், இதில் குறையும் 10 வேலை நாட்களை தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சிகள், குறுவளமையக் கூட்டத்திலுள்ள ஈடுசெய்தல் போன்றவற்றிற்கு நிர்ணயம் செய்யலாம் என்றும், மேற்கண்ட புதிய நடைமுறையால் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கும், தொடக்க/ நடுநிலைப் பள்ளிகளுக்கும் ஒரே சீரான நடைமுறை அமையும் என்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5. மேற்கண்ட நிலையில், தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து பள்ளிக் கல்வி இயக்ககத்தின் கீழ் இயங்கும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் மொத்த வேலை நாட்களின் எண்ணிக்கை 210 நாட்களாக இருப்பதைப் போல, தொடக்க / நடுநிலைப் பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் பணி நாட்களை 10 நாட்கள் குறைத்து குழந்தைகளுக்கு 210 நாட்களுக்கு கற்றல் கற்பித்தல் பணி நாட்களாக அமைக்கவும், குறைக்கப்பட்ட 10 பணி நாட்களை தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களின் பயிற்சி மற்றும் குறுவமையக் கூட்டத்திற்கு ஈடுசெய்யும் விடுப்புகளுக்கு நேர் செய்யும் எனஅரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.உதயசந்திரன்
அரசுச் செயலாளர்.